www.padippakam.com



# யாழ்பாடி கதையும் யாழ்ப்பாணமும்

14

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

கதிரமலையில் இருந்து குடா நாட்டை ஆட்சி செய்த தமிழ் அரசர்கள் எவரும் தங்கள் பெயருக்குப் பின்னால் ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பெயரைச் சூடிக் கொள்ளவி-ல்லை.

கதிரமலையின் கடைசி மன்னனும் சிங்கை நகரின்முதல் மன்னுமான உக்கிரசிங்கனுக்குக் கூட ஆரியச் சக்கரவர்த்தி என்ற பட்டம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவனுக்குப் பின் வந்த அவனது பரம்பரையினர் அனைவரும் பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் பெயர்களுடன் ஆரியச் சக்ரவரத்தி என்ற பெயரைச் சூடிக் கொண்டதை அவதானிக்க முடிகின்றது.

தமிழர்களாகவும் திராவிட இனக் குழுவைச் சேர்ந்தவர்களாகவும் இருந்த இந்த சிங்கை நகர் மன்னர்கள் எதற்காக ஆரியச் சர்க்கரவர்த்திகள் என்ற பெயரைச் சூடிக் கொண்டார்கள் என்பது ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இவர்களது வரலாற்றை ஆய்வு செய்த முதலியார் குலசபாநாதன் முதலியார் இராஜநாயகம், பேராசிரியர். க.கணபதிப்பிள்ளை முதலானோர் இராமே-ஸ்வரத்திலுள்ள பிராமணியத் தொடர்பால் இவர்களுக்கு ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பட்டம் உருவாகி இருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

உண்மையில் சிங்கை நகர் உருவாக்கப்பட்ட காரண காரியங்களுடன் இணைத்தே இந்தப் பட்டப்பெயரின் உருவாக்கத்தைப் பார்க்க வேண்டும்.

ஆரியச் சர்க்ரவர்த்தி என்று இரண்டு பேருக்குப் பெயர் இருந்திருக்கின்றது. ஒருவர் இந்துக்களின் அவதார புருசரும் திருமாலுடைய அம்சத்தை உடையவருமான இராமபிரான். மற்றவர் பௌத்த மதத்தின் காவலன் என்று சொல்லப்படுகின்ற அசோக மன்னன்.

கதிரமலையில் (கந்தரோடை) இருந்து அரசாண்ட தமிழ் பௌத்த மன்னனான உக்கிரசிங்கனுக்கு நிச்சயமாக அசோக சக்கரவர்த்தி மீது பெரும் பற்றுதலும் மதிப்பும் இருந்திருக்க சாத்தியமுண்டு. அவனது முன்னோர்கள் காலத்தில் அசோகனது பிள்ளைகளான மகிந்தனும் சங்கமித்திரையும் பௌத்த மத-த்தைப் பரப்ப இலங்கைக்கு வந்த போது கதிரமலைக்கு வந்திருக்கின்றார்கள். அவர்கள் வான் வழியாகப் பறந்து வந்து அனுராதபுரத்தில் இறங்கியதாக மகாவம்சம் சொன்னாலும் அவர்கள் காவிரிப்பூம் பட்டணத்திலிருந்து கதிரமலையூடாகவே இலங்கை வந்ததாக தொல்பொருள் சான்றுகள் குறி-ப்பிடுகின்றன. உண்மையில் தென்னிந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி பௌத்தம் பரவுவதற்கு காரணமாக இருந்தவன் அசோகன். எனவே பௌத்த பாரம்பரியத்தைக் கொண்ட உக்கிரசிங்கன் அசோகன் வழியில் வந்தவன் என்ற அடிப்படையில் அவனது சந்ததியினர் ஆரியச் சக்கரவர்த்திகள் என்று பட்டம் சூடியிருக்கக் கூடும். இந்த விடயம் பற்றிய ஒரு முழுமையான ஆய்வு தேவை.

அடுத்து வைஷ்ணவ பாரம்பரியத்தில் வந்த சில மன்னர்கள் இராமாயணத்தில் வரும் பரதனுடைய வழியைப் பின்ப-ற்றி தங்களது ஆட்சியை ஸ்ரீ ராமனுடைய ஆட்சியாகப் பிரகடனப்படுத்திவிட்டு தாம் அவருக்காக ஆட்சியில் இருப்பவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் வழக்கமொன்று இந்தியாவில் இருந்தது. ஆந்திராவில் இருந்த விஜய நகரப்பேரரசும் அவ்வாறே இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அந்த அடிப்படையில் சிங்கைநகர் மன்னர்களும் தாங்களும் ஆரியச் சக்கரவர்த்தியான ஸ்ரீ ராமனுக்காக ஆட்சியில் இருப்பவர்கள் என்று காட்ட முனைந்திருக்கக் கூடும். இதற்கும் விரிவான ஆய்வு தேவை.

பொதுவாக ஒரு ஆட்சியை கடவுளின் ஆட்சியாகப் பிரகடனப்படுத்தும்போது அந்த ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்வது அந்த ஆட்சியில் உள்ளவர்களுடன் யுத்தம் புரிவது கடவுளுக்கு எதிரானது என்று காட்டுவதற்கு இந்த யுக்தி கையாளப்பட்டு வந்தது.

சிங்கை நகரிலே உக்கிரசிங்கனுக்குப் பின் அவனது மகன் ஜெயதுங்கபரராஜசிங்கன் ஆட்சி செய்து வரும் போது அனுராத புரத்திலே முதலாம் சேனன் (கி.பி831) ஆட்சி செய்து வந்தான். அக்காலத்தில் இலங்கை முழுவதையும் கைப்பற்றும் நோக்குடன் வர்ணகுல பாண்டியன் எனப்படும் சிறீமாற சிறீ வல்லபவன் என்ற பாண்டிய மன்னன் படையெடுத்து வந்ததாக சூளவம்சம் கூறுகின்றது. இந்தப் பாண்டியப் படை முதலில் சிங்கை நகர் மன்னன் ஜெயதுங்கபரராஜசிங்கனை வெற்றி கொண்டு குடாநாட்டைக் கைப்பற்றி மகாதாலித்த காமம என்ற பெயருடைய இன்றைய வடமராட்சி தாளையடிப் பகுதியில் பாடி வீடமைத்துத் தங்கியிருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

இந்தப் போரில் சிங்கைநகர் மன்னன் ஜெயதுங்கபரராஜசிங்கன் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அதன் பின் பாண்டிய மரபில் வந்த பாணன் என்பவன் அரசனாகியதாக பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

ஆனால் யாழப்பாண வைபவமாலை மயில்வாகனப் புலவரோ ஜெயதுங்கபரராஜசிங்கன் காலத்தில் சோழநாட்டிலிருந்து இரண்டு கண்ணும் குருடான கவி வீரராகவன் எனும் யாழ்ப்பாணன் அவனைப்புகழ்-ந்து பாடி யாழ் வாசித்தானெ-ன்றும் அவனது புலமையையும் திறமையும் மெச்சிய அரசன் மணற்றிடலாக இருந்த வடபகுதியை அவனுக்குப் பரிசாகக் கொடுத்ததாகவும் அவன் அந்த மணற்றிடலுக்கு யாழ்ப்பாணம் என்று பொயரிட்டு தமிழ் நாட்டிலிருந்து தமிழ்க் குடிகளையும் அங்கிருந்த சிங்களவர்களையும் ஆண்டான் என்றும் குறிப்பிடுகின்றார்.

அவரது இந்தக் கூற்று வெறும் கட்டுக் கதையென்று பின்னாளில் வந்த தமிழ் வரலாற்றாசிரியர்கள் நிராகரித்தாலும் முதலியார் இராஜநாயகம் அவர்கள் இதை அவ்வாறு முற்றாக நிராகரிக்காமல் ஜெயதுங்கபரராஜசிங்கன் சிங்கைநகரிலிருந்து அரசாளும் காலத்தில் யாழ்ப்பாடி எனும் பாணர் குலத்தான் ஒருவன் தமிழ்நாட்டிலிருந்து வந்து யாழ் வாசித்துத் தன் திறமையைக் காட்ட அதை மெச்சிய மன்னன் இப்போது குடாநாட்டில் கரையூர், பாசையூர் என்று அழைக்கப்படும் மணல் மேட்டைப் பரிசாகக் கொடுத்ததாகவும் அவன் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு தமிழ்நாட்டுக்குத் திரு-ம்பி அங்கிருந்து தன்னுடைய குலத்தார்களை அழைத்து வந்து அங்கு குடியேற்றி அந்த இடத்திற்கு யாழ்ப்பாணம் என்று பெயர் வைத்ததாகவும் பாணர்களில் பலர் மீன் பிடிக்கும் தொழிலை உடையவர்களான படியால் அங்கு குடியேறிய மக்கள் மீன் பிடிக்கும் தொழிலையே செய்து வந்தார்கள் என்றும் யாழ்ப்பாணப்பட்டினம் என்று அழைக்கப்பட்ட அந்த இடம் பின்னர் பறங்கியர்கள் கட்டிய இன்றைய யாழ்ப்பாண நகருக்கான பெயராக மாறி அதன் பின் குடாநாடு முழுவதற்குமான பெயராக மாறிவிட்டது என்றும் குறிப்பிடுகின்றார்.

மயில்வாகனப் புலவர் வைபவ மாலையில் குறிப்பிடும் அந்தக் கவிவீரராகவர் கி.பி.1240 இல் சிங்கைநகரில் இருந்து அரசாண்ட குலசேகர சிங்கையாரின் காலத்தில் வந்தவன் என்பது முதலியார் இராஜநாயகத்தின் வாதம்.

இந்த மன்னன் காலத்தில் அந்தக் கவிவீரராகவ முதலியார் என்னும் வேளாள செந்தமிழ் புலவன் அரச சபைக்கு வந்தான். அப்போது அம்பும் வில்லும் கத்தியுமாக வேட்டைக்குப் புறப்பட்ட மன்னன் தயாராக நின்றான். அந்த நேரத்தில் குருடன் முகத்தில் முழிப்பது சகுனக் கேடு என்று கருதிய மன்னன் திரை போட்டு அதற்கு அப்பால் இருந்து கொண்டு அவனைப் பாடச் சொன்னான். உடனே அவன்

**“நரை கோட்டினம் கன்றும் நல்வள**
**நாடும் நயந்தளிப்பான்**
**விரையூட்டு தாம்புய வெற்பீழ**
**மன்னனென்றே விரும்பிக்**
**கரையேரட்ட மீதின் மரக்கலம்**
**பேரட்டுனைக் காண வந்தால் திரை**
**பேரட்டு நீயிருந்தாய் சிங்கையாரிய**
**சேகரனே”**

என்று பாடியதாகவும் அதைக் கேட்டு பெருமகிழ்ச்சியடைந்த மன்னன் திரையை விலக்கி வீரராகவனை ஆரத்தழுவி அரண்மனையிலிருந்து ‘ஆரூருலா’ என்னும் அருந்தமிழ் நூலைப் பாடுவித்து அரங்கேற்றியதுடன் புலவருக்கு பொற்பந்தம் (பொன் முடிப்பு) ஒன்றுமளித்ததோடு

**“புவியோர் பெறுந்திரு வாரூலாவைப்**
**புலவர்க் கெல்லாஞ் செவியே**
**சுவை பெறுமாறு செய்தான்**
**சிவஞான வனு பவியே யெனுங்**
**கவி வீரராகவன் பாடிய நற்கவியே**
**கவியவனல்லாத பேர் கவியே**
**கற்கவியே”**

என்று பாடியதாகவும் அதை-க்கேட்டு மகிழ்ந்த புலவர்

**“பெரங்குமிடியின் பந்தம் பேரயதே**
**யென் கவிதைக்கெங்கும் விருது**
**பந்தமேற்றதே குங்கு மந்தோய்**
**வெற்பந்தமான புயவீரபரராஜசிங்கம்**
**பொற்பந்துமின்றளித்த போது”**

என்னும் கவியைப் பாடியதாகவும் முதலியார் இராஜநாயகம் குறிப்பிடுகின்றார்.

*1. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை*
*2. முதலியார் இராஜநாயகம் யாழப்பாணச் சரித்திரம்*
*3. முதலியார் குலசபாநாதன் யாழ்ப்பாண வைபவமாலை*

**- நக்கீரன்**



மகாதாலித்த காமம் (?)

**வைஷ்ணவ பாரம்பரியத்தில் வந்த சில மன்னர்கள் இராமாயணத்தில் வரும் பரதனுடைய வழியைப் பின்பற்றி தங்களது ஆட்சியை ஸ்ரீ ராமனுடைய ஆட்சியாகப் பிரகடனப்படுத்திவிட்டு தாம் அவருக்காக ஆட்சியில் இருப்பவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் வழக்கமொன்று இந்தியாவில் இருந்தது. ஆந்திராவில் இருந்த விஜய நகரப்பேரரசும் அவ்வாறே இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அந்த அடிப்படையில் சிங்கைநகர் மன்னர்களும் தாங்களும் ஆரியச் சக்கரவர்த்தியான ஸ்ரீ ராமனுக்காக ஆட்சியில் இருப்பவர்கள் என்று காட்ட முனைந்திருக்கக் கூடும்**

படிப்பகம்